சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்– திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் வேங்கிபாளையம் அங்கன்வாடி பணியாளர் திருமதி. ரா. பாலாமணி என்பவருக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் காரணமாக 6 மாதங்களுக்கு மேல் விடுப்பில் உள்ளதால் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்கள் சிறப்பினமாக வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை

அரசாணை (நிலை) எண்.37

நாள்.31.07.2014
திருவள்ளுவராண்டு 2045
ஜய, ஆடி 15

படிக்கப்பட்டவை:

1 அரசாணை (நிலை) எண்.4, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 09.01.1995.
2 அரசாணை (நிலை) எண்.146, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 16.11.2009
3 திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.2203/அ1/2014, நாள் 25.2.2014.
4 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரக ந.க.எண்.8292/இ3–2/2014, நாள் 20.6.2014.

+++++

ஆணை :

பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், குழந்தை நல அமைப்பாளர்கள் ஆறு மாதங்களுக்குமேல் தொடர்ச்சியாக விடுப்பிலோ அல்லது பணிக்கு வராமலோ இருந்தால் அவர்களை பணி நீக்கம் செய்யலாம் என்றும், பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில், பணியை ராஜினாமா செய்தவர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களும் ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்கள் ஆவர் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரம் வேங்கிபாளையம் அங்கன்வாடி மைய பணியாளர் திருமதி பாலாமணி என்பவருக்கு 09.05.2013 அன்று எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானதால் 10.05.2013 முதல் தொடர் விடுப்பில் உள்ளார் என்றும் விடுப்பின் விவரத்தினையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

i. 10.5.2013 முதல் 31.7.2013 வரை 83 நாட்கள்
ii. 01.08.2013 முதல் 31.10.2013 வரை 92 நாட்கள்
iii. 01.11.2013 முதல் 11.11.2013 வரை 11 நாட்கள்
iv. 12.11.2013 முதல் 07.01.2014 வரை 57 நாட்கள்
v. 08.01.2014 முதல் 08.04.2014 வரை 91 நாட்கள்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மருத்துவர் குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டு மருத்துவர் குழு மூலமாக 08.04.2014 வரை விடுப்பு வழங்க பரிந்துரையும் பெறப்பட்டுள்ளது என்றும், திருமதி பாலாமணி அங்கன்வாடி பணியாளராக 01.07.1982ல் பணியேற்று சுமார் 31 வருடங்களாக எவ்வித குறைபாடும் இல்லாமல் பணியாற்றியுள்ளதால் 6 மாத காலத்திற்கு மேல் உள்ள விடுப்பினை சிறப்பு நிகழ்வாக கருதி ஊதியமில்லா விடுப்பாக அனுமதியும் அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில், திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரும் பரிந்துரைத்து, இந்நிகழ்வை சிறப்பு நேர்வாக கருதி திருமதி. ரா. பாலாமணி என்பவருக்கு ஓய்வூதியமும் மற்றும் இதர ஓய்வூதிய பயன்கள் பெறவும் அனுமதித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு விடுப்பில் உள்ள அங்கன்வாடி பணியாளர் திருமதி. பாலாமணி என்பவரின் 31 ஆண்டுகால பணியினை கருத்திற் கொண்டு தனியருக்கு சிறப்பினமாக கட்டாய ஓய்வு அளித்து ஒட்டு மொத்தத் தொகை மற்றும் சிறப்பு ஓய்வூதியம் வழங்குவதற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர்
மாவட்ட திட்ட அலுவலர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், திருப்பூர்
வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,
வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம், குண்டடம் வட்டாரம், திருப்பூர்
மாநில கணக்காயர், சென்னை – 18
மாநில கணக்காயர் (தணிக்கை–I/II), சென்னை –18
கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், திருப்பூர்
உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம், திருப்பூர் மாவட்டம்

நகல்
நிதி (சமூகநலம்) (ஓய்வூதியம்) துறை, சென்னை –9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆர். எல். சுரேஷ்
01/8/2014
பிரிவு அலுவலர்.
1.8.2014